செய்தி வெளியீடு நாள் : 29.11.2023

**மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும் மற்றும் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் மற்றும் சாலைப் பணிகள் முன்னேற்றம் குறித்தும் காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் வனத்துறையுடன் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி இன்று (29.11.2023) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டம் குறித்தும், 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் மற்றும் சாலைப் பணிகள் முன்னேற்றம் குறித்து காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் வனத்துறையுடன் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்திலிருந்து பேருந்துகள் போக்குவரத்து நெரிசலின்றி செல்வதற்காக சாலை அமைக்கும் பணிகளான அயனஞ்சேரி முதல் மீனாட்சிபுரம் வரை, சி.வே.கே.சாலை முதல் ஊரப்பாக்கம் – நல்லம்பாக்கம் வரை மற்றும் ஆதனூர் முதல் மாடம்பாக்கம் வரை நடைபெற்றுவரும் சாலைப்பணிகள் குறித்தும், முடிச்சூரில் புதிதாக அமையவுள்ள ஆம்னி பேருந்து நிறுத்திமிடத்தில் நடைபெற்றுவரும் பணிகள் குறித்தும், கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் நடைபெற்றுவரும் மழைநீர் வடிகால் பணிகள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பூங்காக்களில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், கிளாம்பாக்கம் புதிய பேருந்து முனையத்தில் மருத்துவ வசதிகள் மற்றும் காவல் நிலையம் அமைப்பது குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான "வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்" ஒரு பகுதியாக சென்னை நம்மாழ்வார்பேட்டை, அரசு பல்வகை தொழில்நுட்பக் கல்லூரியை கடந்த 04.11.2023 அன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் ஆய்வு செய்ததின் அடிப்படையில், அக்கல்லூரியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து வட சென்னை இளைஞர்களின் திறன் பயிற்சிக்காகவும் மற்றும் கூடுதல் வசதிகள் மேம்படுத்துவதற்காகவும் விரைவில் "திறன் மேம்பாட்டு பயிற்சி மையம்" தொடங்குவதற்குண்டான நடவடிக்கைகள் குறித் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

இக்கூ டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.